பருவம் (11)

தென்றலே நீ
ஈரத்தைத் துடைத்துப் போகும் போது
அவள் நினைவையும் உடன் துடைத்துப் போ;

பெருங்காற்றே நீ
மேகக் கூட்டத்தைக் கலைத்துப் போகும் போது
அவளுக்காய் இவன் கட்டிய
காதல் கூட்டையும் உடன் கலைத்துப் போ;

சாரலே நீ
ஜில்லெனத் தரையை நனைத்துப் போகும் போது
அவள் மேல் இவன் கொண்ட
ஆசைக் கனலையும் உடன் நனைத்துப் போ;

பெருமழையே நீ
கொட்டித் தீர்த்து விட்டுப் போகும் போது
அவள் மறக்க இவன் படும் பாட்டைப் பார்த்து
ஒரு சொட்டுக் கண்ணீரை விட்டு விட்டுப் போ...

அ. சௌ
பெங்களூர்
27 ஆகஸ்டு 2014.